இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு

# பெறுகை அறிவித்தல்

**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தொழில் வங்கி (Job Bank) முறைமைக்குள் தேசிய வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பதிவகத்தை வடிவமைத்தல், அபிவிருத்தி செய்தல், அமுல்படுத்துதல், அமைப்பினை செயற்பாட்டு நிலைக்கு கொண்டு வருதல், மற்றும் பராமரித்தல்**

**PR/02/12-51**

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தொழில் வங்கி (Job Bank) முறைமைக்குள் தேசிய வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பதிவகத்தை வடிவமைத்தல், அபிவிருத்தி செய்தல், அமுல்படுத்துதல், ஆரம்பித்தல் மற்றும் பராமரித்தலுக்கு முறையாக மென்பொருள் ஒன்றின் அபிவிருத்தி சேவைக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் கீழ் செயற்படும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் திணைக்கள பெறுகைக் குழு (DPC) தலைவரினால் அழைக்கப்படுகின்றன.

விலைமனுக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையை பின்பற்றி நடத்தப்படுவதுடன் விலைமனுக்கோரல் ஆவணங்களில் வழங்கப்பட்டுள்ள தகைமைத் தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்யும் அனைத்து தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்கள் இதில் பங்குபற்றலாம்.

ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பத்தரமுல்ல, கொஸ்வத்த, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, 234ஆம் இலக்கத்திலுள்ள 2ஆம் மாடியின் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக பெறுகைக்கான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி 011-2880550. மின்னஞ்சல்: mgr_procurement@slbfe.lk

2026-11-09ஆம் திகதி முதல் 2026-11-30ஆம் திகதி வரையும் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்குமிடையில், அத்தாட்சிப்படுத்தப்பட்ட வியாபார பதிவு சான்றிதழின் சான்றுபடுத்திய புகைப்படப் பிரதியொன்றுடன் நிறுவனக் கடிதத் தலைப்பில் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக பெறுகைப் பிரிவிலிருந்து விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளலாம் மற்றும் 2026-11-09ஆம் திகதி முதல் 2026-11-30ஆம் திகதி வரையான வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

விலைமனு ஆவணங்களைக் கொள்வனவு செய்வதற்கு முன் மீளளிக்கப்படாத 5,000.00 ரூபா கட்டணத்தை காசாளருக்குச் செலுத்த வேண்டும்.

முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தொழில் வங்கி (Job Bank) முறைமைக்குள் தேசிய வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பதிவகத்தை வடிவமைத்தல், அபிவிருத்தி செய்தல், அமுல்படுத்துதல், அமைப்பினை செயற்பாட்டு நிலைக்கு கொண்டு வருதல் மற்றும் பராமரித்தல் - PR/02/12/51" எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

விலைமனுக்கள் 2026-12-01ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முன்னராக கிடைக்கும் வகையில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக 2ஆம் மாடியின் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள 01ஆம் இலக்கப் கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமாக சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின் பின்னர் இதே இடத்தில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியானவர் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2026-11-19ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு SLBFEயின் பணிப்பாளர் சபை அறையில் இடம்பெறும்.

எந்தவொரு காரணத்தையும் முன்வைக்காமல் எந்தவொரு விலைமனுவையும் நிராகரிப்பதற்கான உரிமையை திணைக்கள பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன் எந்தவொரு விலைமனு ஆவணத்தின் தயாரித்தல் அல்லது சமர்ப்பித்தலில் நேரடியாக அல்லது மறைமுகமாக ஏற்படும் எந்தவொரு செலவினத்திற்கும் பொறுப்பேற்கப்பட மாட்டாது.

**தலைவர்,**
**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்,**
**இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**கொஸ்வத்த, பத்தரமுல்ல.**

**தொலைபேசி : 011-2880550 / 011-2887585**
**மின்னஞ்சல் : mgr_procurement@slbfe.lk**